
# கொட்டிக் கொடுக்கும் கேழ்வரகு…. குறைவான நீரில் நிறைவான மகசூல்..!

**10.07.2013**





தமிழ்நாட்டின் தட்பவெப்ப சூழ்நிலைக்கும், தமிழக மக்களின் வாழ்வியல் முறைக்கும் ஏற்ற உணவாகச் சொல்லப்படுவது கேழ்வரகுதான். சொல்லப் போனால்.. நாற்பது, ஐம்பது ஆண்டுகளுக்கு முன், இங்கே பெரும்பாலானவர்களின் உணவே… கேழ்வரகு உள்ளிட்ட சிறுதானியங்கள்தான். குறிப்பாக, குடலைக் கெடுக்காத உணவுகளில் ஒன்று, கேழ்வரகு. நாகரிகம் என்ற பெயரில், அரிசி உள்ளிட்ட பலவிதமான உணவுகளின் பயன்பாடு அதிகரிக்கத் தொடங்கினாலும், கேழ்வரகு மகாத்மியம் தெரிந்தவர்கள் மட்டும், தொடர்ந்து உணவாகப் பயன்படுத்தி வருகிறார்கள். இந்நிலையில், சமீபகாலமாக கேழ்வரகு உள்ளிட்ட சிறுதானியங்களின் பெருமை மக்களிடையே பரவ ஆரம்பித்திருக்கிறது. இதனால், சந்தையில் அதன் தேவை, ஓரளவுக்கு உயரத் தொடங்கி உள்ளது.
இத்தகையச் சூழலில், பல காலமாகவே கேழ்வரகு சாகுபடியைத் தொடர்ந்து கொண்டிருக்கும் கிருஷ்ணகிரி மாவட்டம், பாளேகுளி கிராமத்தைச் சேர்ந்த ஓய்வு பெற்ற ஆசிரியர், ராமமூர்த்தி. கிருஷ்ணகிரி மாவட்டம், காவிரிபட்டணம் நகரிலிருந்து 10 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள வேலம்பட்டி அருகே இருக்கிறது பாளேகுளி. இங்குதான் ராமமூர்த்தியின் தோட்டம் இருக்கிறது. எனக்கு ஒன்றேகால் ஏக்கர் நிலம் இருக்கிறது. அதில் வருடா வருடம் நாட்டு ரக கேழ்வரகைத்தான் போடுவேன். இந்த முறை நாட்டு ரகம் கிடைக்கவில்லை. அதனால். காவிரிப்பட்டணம் உதவி வேளாண் அலுவலகத்தில் ஜி.பி.யூ28 ரகத்தை வாங்கி சாகுபடி செய்தேன். நாட்டு ரகம் போலவே குறைவான தண்ணீரிலேயே நன்றாக விளைகிறது. ஏக்கருக்கு 4 மூட்டை (100 கிலோ மூட்டை) கூடுதல் மகசூல் கிடைத்திருக்கிறது என்றார்.
ஜி.பி.யு.28 ரக கேழ்வரகு 75 நாள் பயிர். ஒன்றே கால் ஏக்கருக்கு 6 கிலோ விதை தேவைப்படும். இதை சதுரப் பாத்திகளில் விதைத்து தண்ணீர் பாய்ச்சினால், 25 நாட்களில் நாற்று தயாராகிவிடும். அதற்குள் நடவு நிலத்தைத் தயார் செய்துவிட வேண்டும். கட்டிகள் இல்லா அளவுக்கு நிலத்தை

நன்றாக உழுது.. 4 டன் மாட்டு எருவைத் தூவி உழவு செய்து, பாசனம் செய்ய வசதியாக பாத்திகளை அமைத்துக் கொள்ள வேண்டும். நிலத்தில் தண்ணீர் கட்டி ஈரப்படுத்திக் கொண்டு, நாற்றுகளைக் குத்துக்கு இரண்டாக நடவு செய்ய வேண்டும். தொடர்ந்து, வேளாண்மைத்துறையின் சார்பில் பரிந்துரைக்கப்படும் ரசாயன உரங்களைக் கொடுத்து, தண்ணீர் பாய்ச்சினால், பயிர் நன்றாக வளரும்.

20-ம் நாளில் கொத்து மூலமாக களைகளைக் கொத்திவிட்டு, பயிரைக் கொஞ்சம் வாடவிட்டு. பரிந்துரை செய்யப்பட்ட உரம் கொடுத்து, தண்ணீர் பாய்ச்ச வேண்டும். ஒவ்வொரு முறையும் பயிரை வாட விட்டுத்தான் பாசனம் செய்ய வேண்டும்.

அதிகமாக பாசனம் செய்தால், வேர்களில் ஈரம் தங்கி, பயிர் வெளுப்படைந்து, தாள் அடர்த்தி குறைவதுடன் தூர் பெருக்காது. பொதுவாக, கேழ்வரகில் பூச்சித் தாக்குதல் இருக்காது என்பதால், பூச்சிக் கொல்லிகள் தேவைப்படாது. நடவிலிருந்து 40 நாட்களுக்குப் பிறகு கதிர் தெரிய ஆரம்பிக்கும். 60 நாட்களுக்கு மேல் கதிர் முற்ற ஆரம்பிக்கும். கதிர் வெளிவந்த பிறகு, இரண்டு முறை பாசனம் செய்தால் போதும்.

கதிர் பச்சை நிறத்திலிருந்து பழுப்பு நிறத்திற்கு மாறத் தொடங்கும் சமயத்தில், அறுவடை செய்யலாம். அறுவடை செய்த கதிரை, ஒரு நாள் மூடி வைத்து, மாடுகள் மூலமாக தாம்பு ஓட்டினால்… சிவப்பு நிற ராகி கிடைக்கும். ஒரு நாள் மூடி வைப்பதற்கு பதிலாக, இரண்டு நாட்கள் மூடி வைத்து தாம்பு அடித்தால், கறுப்பு நிற ராகி கிடைக்கும். இதை புடைத்து, மூட்டை பிடித்து வைக்க வேண்டும்.

“கறுப்பு ராகி மாவு, சமையலுக்குப் பயன்படும். கர்நாடகாவில் கறுப்பு ராகியைத்தான் சமையலுக்குப் பயன்படுத்துகிறார்கள். ஆரம்பத்தில் மக்க வைத்துதான் தாம்பு ஓட்டுவோம். இப்போது அப்படியே காய வைத்து ஓட்டுறோம்.

ஒரு காலத்தில் பைசா செலவில்லாமல் கேழ்வரகு பயிர் செய்தார்கள். இப்போது அந்த மாதிரி செய்ய முடிவதில்லை. வீட்டு ஆட்களை வைத்து செய்யபவர்கள் கூடுதலாக லாபம் பார்க்க முடியும். ஒன்றேகால் ஏக்கரில் கேழ்வரகைப் பயிர் செய்ய, 24 ஆயிரத்து 220 ரூபாய் செலவு செய்திருக்கிறேன். இந்த முறை 17 மூட்டை கிடைத்திருக்கிறது. ஒரு மூட்டை 2 ஆயிரத்து 200 ரூபாய் என்று விற்றதில், 17 மூட்டைக்கும் சேர்த்து, 37 ஆயிரத்து 400 ரூபாய் கிடைக்கிறது. கேழ்வரகுத்தாள், கிட்டத்தட்ட 15 ஆயிரம் ரூபாய்க்கு விலை போகும். ஆனால், நான் அதை விலைக்குக் கொடுக்காமல், சொந்தத்துக்கு வைத்துக் கொண்டேன். அதை கணக்கில் சேர்த்தால், ஒன்றே கால் ஏக்கரில் 52 ஆயிரத்து 400 ரூபாய் வருமானம். செலவெல்லாம் போக, 28 ஆயிரத்து 180 ரூபாய் லாபமாக கையில் நிற்கிறது என்று வரவு செலவுக் கணக்குகளை சொன்னார்.

**ஒன்றே கால் ஏக்கர் நிலத்தில், கேழ்வரகு பயிர் செய்ய ராமமூர்த்தி சொல்லும் செலவு – வரவு கணக்கு (ரூபாயில்)**

| விவரம் | செலவு | வரவு |
|---|---|---|
| உழவு | 5,000 | |
| பாத்தி அமைக்க | 3,000 | |
| நடவு | 6,500 | |
| களை | 2,000 | |
| உரம் | 1,720 | |
| அறுவடை | 5,000 | |
| தாம்பு ஓட்ட | 1,000 | |
| 17 மூட்டை விற்பனை மூலம் வரவு (2,200x17) | | 37,400 |
| தாள் விற்பனை மூலம் வரவு | | 15,000 |
| மொத்தம் | 24,220 | 52,400 |
| நிகரலாபம் | | 28,180 |

இயற்கை முறையில் பயிர் செய்வது பற்றி, இங்கு விளக்குகிறார், தர்மபுரி மாவட்டம், பொம்முடி கிராமத்தைச் சேர்ந்த முன்னோடி இயற்கை விவசாயி அருண். சாகுபடி நிலத்தில், பசுந்தாள், தானியப் பயிர்கள், எண்ணெய்வித்துப் பயிர்கள், அவரை, கீரை ஆகியவற்றில் தலா 2 கிலோ விதைகளை நிலத்தில் தூவி விட்டு தண்ணீர் பாய்ச்ச வேண்டும். இவையெல்லாம் முளைத்து வந்து… பூ, காய் விடும் நேரத்தில், அப்படியே மடக்கி உழுது நிலத்தைக் காயவிட்டு, வழக்கம் போல் சாகுபடி மேற்கொண்டால் போதுமானது. இதற்கு ஏக்கருக்கு 2 ஆயிரம் ரூபாய் செலவு ஆகும். இதைச் செய்ய முடியாதவர்கள், ஏக்கருக்கு 5 டன் எருவைக் கொட்டி வழக்கமான முறையில் சாகுபடி செய்யலாம். இப்படிச் செய்யும் போது எந்த உரமோ, பூச்சிக் கொல்லியோ தேவை இல்லை. களை எடுத்து, தண்ணீர் பாய்ச்சி வந்தால் மட்டும் போதுமானது. இன்னும் சில நுட்பங்களைக் கடைபிடிப்பதன் மூலம், அதிக மகசூல் எடுக்க முடியும்.

ஒவ்வொரு பாசனத்தின் போதும் ஏக்கருக்கு 200 லிட்டர் அமுதக்கரைசலைக் கலந்து விட்டால், மண் வளமாகும். பஞ்சகவ்யா அல்லது மோர்க் கரைசலைத் தெளித்து வந்தால், கதிர்களின் சுவையும் எடையும் கூடும். பனம்பழம் கிடைக்கும் காலங்களில், அதை பாசனத் தண்ணீரில் பிசைந்து விடலாம். ஒரு குடுவையில் 2 லிட்டர் மோர் எடுத்துக் கொண்டு, அரைத்த ஒரு கிலோ துரிஞ்சல் இலையை அதில் சேர்த்து வேடு கட்டி, எருக்குழியில் புதைத்துவிட வேண்டும். ஒரு வாரம் கழித்து இதை எடுத்து, 1:10 என்ற விகிதத்தில் தண்ணீரில் கலந்து தெளித்தால் மகசூல்

கூடும் என்றார்.

அருண் தந்த இயற்கை முறை விவசாயத் தொழில்நுட்பங்களை, ராமமூர்த்தியிடம் சேர்ப்பித்த போது.. “செலவில்லாமல் இயற்கை முறையில் பயிர் செய்ய முடிகிறது என்றால், எனக்கு சந்தோஷம்தான் . அடுத்த முறை இயற்கைத் தொழில்நுட்பங்களைக் கட்டாயம் பயன்படுத்துவேன் என்றார்.

**தொடர்புக்கு**

**உதவி வேளாண் அலுவலகம், காவிரிப்பட்டணம்,**

**தொலைபேசி : 04343-252050**

**செல்போன்:98656-57598**

**ராமமூர்த்தி, செல்போன்:97903-82629**

**அருண், செல்போன்: 98653-19772**

**ஆதாரம்: பசுமை விகடன் வெளியீடு 10.07.13** www.vikatan.com